# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8035288

1. District : மாவட்டம் வேலூர் | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் 10/17 | Date: நாள் 30.10.2017

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(e)

   (ii) Act சட்டம்: P.C. Act 1988 | Sections பிரிவுகள்: of P.C. Act 1988.

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 30.10.2017 [illegible]

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2017 | Time நேரம் 14.00 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 1 k.m. தெற்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி வேலூர் மாநகராட்சி அலுவலகம், வேலூர்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. சேகர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சிம்பு

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52/17 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், வேலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திரு. P. குபேந்திரன், ஆணையாளர், மாநகராட்சி அலுவலகம், வேலூர்.
   2. திருமதி. மல்லிகேஸ்வரி, இளநிலை உதவியாளர், E-1 பிரிவு, மாநகராட்சி அலுவலகம், வேலூர்.
   3. திருமதி. பங்காரம்மா, ஓய்வு பெற்ற பெண் ஊழியர், மாநகராட்சி அலுவலகம், வேலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 30.10.2017
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

* GCP-240 34(Type 2) 90,000 Cps 21 3 16(HCL-12)p.2

பணிந்து சமர்பிக்கப்படுகிறது, இன்று 30.10.2017 காலை சுமார் 10.00 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு வேலூர் பிரிவு அலுவலகத்தில் நான் ஆஜரில் இருந்தபோது வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ஜோதி அவர்கள் ஆஜராகி வேலூர் மாநகராட்சி அலுவலகத்தில் வேலூர் மாநகராட்சி ஆணையாளர், ஒப்பந்ததாரர்களுக்கு அவர்களது பில் தொகைக்கான தொகையை வழங்குவதற்கு, ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணையை வழங்குவதற்காகவும், மற்றும் மொத்த பில் தொகையில் 2% லஞ்சமாக பணம் பெறுவதாகவும், அவ்வாறு பெற்ற பணத்தில் ஒரு பகுதியை மாநகராட்சி அலுவலகத்தில் வைத்திருப்பதாக தகவலாளர்கள் மூலம் நம்பகமான இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றதாகவும், அந்த தகவலை தகவலாளர் மூலம் விசாரித்து ஊர்ஜிதம் செய்ததாகவும், தனது உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்துவிட்டு, உத்தரவுபடி, நேரடியாக வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகம் வந்து தகவல் தெரிவித்தார். பின்னர் அவருடன், நான் மற்றும் குழுவினருடன் வேலூர் மாநகராட்சி அலுவலகம் சென்று இரு துறை திடீர் சோதனை காலை சுமார் 10.30 மணிக்கு ஆரம்பித்து மதியம் சுமார் 13.30 மணிக்கு முடிக்கப்பட்டது. பின்னர் திரு.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் அவர்கள் எழுத்துமூலமாக கொடுத்த புகாரினை நான் உத்தரவுபடி பெற்றேன், அதன் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, இன்று 30.10.2017 காலை நான் அலுவலகத்தில் இருந்தபோது 09.00 மணிக்கு என்னுடைய தகவலாளர் மூலம் நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது அந்த தகவலில் வேலூர் மாநகராட்சியில் பணிபுரியும் திரு.குபேந்திரன், ஆணையாளர், திருமதி.மல்லிகேஸ்வரி, இளநிலை உதவியாளர், E-1 பிரிவு மற்றும் திரு.சுப்புராயன், பட வரைவாளர் ஆகியோர்கள், ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணையை (Work Order), வழங்குவதற்காகவும், மேலும் மாநகராட்சி ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பில் சம்மந்தமான வேலைகளுக்காகவும், ஒப்பந்ததாரர்களிடம் இருந்து லஞ்சமாக கட்டாய வசூல் செய்வதாக தகவல் கிடைக்கப்பெற்றேன். அந்த தகவலை நான் எனது தகவலாளர் மூலம் விசாரித்து ஊர்ஜிதம் செய்ததில், திரு.குபேந்திரன், ஆணையாளர், திருமதி.மல்லிகேஸ்வரி, இளநிலை உதவியாளர், E-1 பிரிவு மற்றும் திரு.சுப்புராயன், பட வரைவாளர் ஆகியோர்கள் மேற்படி ஒப்பந்தப்பணிக்காக பணி ஆணையை வழங்குவதற்காக ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கட்டுமான பணியின் மொத்த மதிப்பீட்டுத்தொகையில் இருந்து கமிஷனாக 2% பணத்தை லஞ்சமாக வாங்குவது உண்மை என்று தெரிந்துகொண்டேன். மேற்படி வேலூர் மாநகராட்சி அதிகாரி மற்றும் ஊழியர்கள் தாங்கள் செய்யவேண்டிய பணியை செய்வதற்கு தங்களுக்குண்டான அலுவலக அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, பணி ஆணையை வழங்குவதற்கு ஒப்பந்ததாரர்களிடம் இருந்து 2% கமிஷன் பணத்தை லஞ்சமாக கட்டாய வசூல் செய்தும் அதில் குறிப்பிட்ட ஒரு பகுதி தொகையை அலுவலகத்தில் வைத்துள்ளனர் என்பதை தெளிவுபட ஊர்ஜிதம் செய்து கொண்டு காலை 10.30 மணிக்கு வேலூர் விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை அலுவலர்களுடன் சேர்ந்து இருதுறை திடீர் கூட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இரு துறை திடீர் கூட்டு சோதனையின் போது தற்போது புதிதாக

பொறுப்பேற்றுள்ள திரு.குபேந்திரன், ஆணையாளர், வேலூர் மாநகராட்சி அலுவலகம் அவர்கள் தற்போது அவர் அமருவதற்காக புதிதாக ஏற்பாடு செய்துள்ள அறையினுள் திரு.குபேந்திரன், ஆணையாளர், திரு.S.செல்வபாலாஜி, ஆணையாளர், செய்யாறு நகராட்சி, திரு.பாபு, அலுவலக உதவியாளர் மற்றும் திரு.தீபன்ராஜ், இளநிலை உதவியாளர், வேலூர் மாநகராட்சி ஆகியோர் பேசிக்கொண்டு இருந்தனர். வேலூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.குபேந்திரன் அவர்களின் மேஜை மற்றும் இருக்கை ஆகியவற்றை சோதனை செய்ய அதில் அலுவலக கோப்புகள் இருந்தது அந்த அறையினுள் இருந்த மற்றொரு அறையான ஓய்வு எடுக்கும் அறையில் இருந்த இரும்பு பீரோ, மரத்தால் ஆனா கண்ணாடியுடன் கூடிய சிகை அலங்காரம் செய்து கொள்ள போடப்பட்டிருந்த ஷெல்ப் ஆகியவற்றை சோதனை செய்ய இரும்பு பிரோவில் சால்வைகள் மற்றும் அலுவக கோப்புகள் இருந்தன. சிகை அலங்காரம் செய்து கொள்ள போடப்பட்டிருந்த மூன்று இழுவறைகள் கொண்ட டேபிளை சோதனை செய்ய அதன் மூன்றாவது இழுவறையின் உள்ளே கத்தையாக ரூ.2,000/- மற்றும் ரூ.500/- நோட்டுகள் இருந்தன அதனை எடுத்து எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.1,10,000/- இருந்தது அது குறித்து திரு.குபேந்திரன், ஆணையாளர் அவர்களிடம் கேட்க அவர் அது தன்னுடைய பணம் இல்லை என்றும் அப்பணம் தன்னுடைய ஓய்வு அறையில் இருந்த டிரஸ்ஸிங் மேஜையின் இழுவறைக்கு எவ்வாறு வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் தன்னிடம் 10 பைசா கூட இல்லை என்றும் தெரிவித்தார், அப்பணத்திற்கு அவர் தகுந்த முகாந்திரம் கூறாத காரணத்தாலும் ஆணையாளர் அறையானது அவரது உபயோகத்திற்காக மட்டுமே உள்ள அறை அதிலும் குறிப்பாக ஓய்வு எடுக்கும் அறை அவரது கட்டுப்பாட்டில் தனியாக கதவுபோடப்பட்டு சாவியுடன் உள்ள அறை அதில் எவ்வாறு பணம் வந்தது என்பதற்கு தகுந்த முகாந்திரம் கூறவில்லை என்ற காரணத்தால் அப்பணம் ரூ.1,10,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதேபோல் மாநகராட்சி அலுவலக பிரிவு அலுவலர்கள் அமர்ந்திருந்த இடத்தில் இருந்தவர்களை ஒவ்வொருவராக சோதனை செய்தும், அவர்களது இருக்கைகளை சோதனை செய்ததில் திருமதி.மல்லிகேஸ்வரி, இளநிலை உதவியாளர் இ-1 பிரிவு என்பவரின் இருக்கையின் முன்பாக அவருக்குரிய மேஜையின் கணினியின் தட்டச்சு பலகை வைப்பதற்காக இருந்த இடத்தில் பணம் ரூ.20,000/- இருந்தது அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க அப்பணம் தன்னுடையது இல்லை என்றும், தனது மேஜைக்கு எவ்வாறு அப்பணம் வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். தகுந்த முகாந்திரம் மற்றும் விளக்கம் கூறாத காரணத்தால் அப்பணம் ரூ.20,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் நிர்வாக பிரிவு இருக்கையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த திருமதி.பங்காரம்மா என்ற ஓய்வு பெற்ற பெண் ஊழியரின் லெதர் கை பையை சோதனை செய்ய அதில் கத்தை கத்தையாக பணம் ரப்பர் பேண்டினால் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது அது குறித்து அவரிடம் கேட்க தன்னிடம் எவ்வளவு பணம் உள்ளது என்பது தனக்கு தெரியாது என்றும் அப்பணம் குறித்த தகுந்த முகாந்திரம் கூறாத காரணத்தால் அதனை எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் ரூ.9,700/- இருந்தது, தகுந்த முகாந்திரம் கூறாத காரணத்தால் அப்பணம் ரூ.9,700/- கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் வருகைப்பதிவேட்டின் படி ஆஜரில் இருந்த மற்றும் தற்காலிக பணியாளர்களாக கணினி இயக்குபவர்கள் ஆகியார் அனைவரையும் சோதனை செய்து அவர் அவர் வைத்திருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறிய காரணத்தால் அவர்கள் வசமே திருப்பு கொடுக்கப்பட்டது. திரு.சுப்புராயன் என்பவர் பயிற்சிக்காக வெளியூர் சென்றிருப்பதாக கூறப்பட்டதால் அவர் மீதான குற்றசாட்டு குறித்த அவர் அலுவலக பணிக்கு திரும்பியவுடன் விசாரணைக்கு உட்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். வேலூர் மாநகராட்சி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டு சோதனையில் மொத்தம் ரூ.1,39,700/- மற்றும் வருகைப் பதிவேடுகள் கைப்பற்றப்பட்டு, சோதனை குறித்த நடவடிக்கைகள் அனைத்தும் செயல்முறையாக தயார் செய்யப்பட்டு 13.30 மணிக்கு இரு துறை திடீர் சோதனை

முடிக்கப்பட்டது. திரு.குபேந்திரன், ஆணையாளர் அவர்களின் புதிய அறையினுள் உள்ள ஓய்வு அறையில் இருந்து தகுந்த முகாந்திரம் கூறாத, மற்றும் தனது ஓய்வு அறையில் இருந்த பணத்திற்கே முகாந்திரம் கூற முடியாத மற்றும் உரிமை கோராத லஞ்ச பணம் ரூ.1,10,000/-ம் கைப்பற்றப்பட்டது. அதே போல் தகுந்த முகாந்திரம் கூறாத மற்றும் உரிமை கோராத லஞ்சபணம் ரூ.20,000/- வைத்திருந்த திருமதி.மல்லிகேஸ்வரி, இளநிலை உதவியாளர், இ-1 பிரிவு அவர்களிடம் கைப்பற்றப்பட்டது. மற்றும் கணக்கு காட்ட முடியாமலும் தகுந்த முகாந்திரம் கூறாத லஞ்சபணம் ரூ.9,700/- வைத்திருந்த திருமதி.பங்காரம்மா, ஓய்வு பெற்ற பெண் ஊழியர் இடம் இருந்து கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.குபேந்திரன், ஆணையாளர், திருமதி.மல்லிகேஸ்வரி, இளநிலை உதவியாளர், இ-1 பிரிவு மற்றும் திருமதி.பங்காரம்மா, ஓய்வு பெற்ற பெண் ஊழியர் ஆகியோர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,39,700/- மற்றும் வேலூர் மாநகராட்சி பொறியாளர், பொது பிரிவுக்கான வருகைப்பதிவேடுகள் மற்றும் செயல்முறை ஆகியவற்றை தங்களிடம் ஒப்புவிக்கிறேன். இப்படிக்கு, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், வேலூர். இணைப்பு:மேலே செல்லப்பட்டது போல்.

Inspr. Mr. Vijay: Pls. receive the complaint and register a case as per law and take up for investigation. Sd(xxxxx) 30/X/17. (M.Balasubramanian) Addl. SP/SIC/VAC/CNI i/c. Vellore Dett.

Sir, Received the complaint on 30/10/2017 at 14.00 Hrs and registered a case in V&AC, Vellore Detachment Cr.No.10/2017, U/s.13(2) r/w 13(1)(e) of PC Act 1988. Sd(xxxxx) 30/X/2017 (S.Vijay)

The Original FIR Submitted to the Chief Judicial Magistrate and Special Judge, Vellore and other copies of FIR, submitted to the officers concerned.

13. Action Taken : A case in Vigilance and Anti-Corruption, Vellore Cr. No. 10/2017, u/s. 13 (2) r/w 13 (1) (e) of Prevention of Corruption Act 1988 against A-1 to A-3.
The Original FIR Submitted to the Chief Judicial Magistrate and Special Judge, Vellore and other copies of FIR, submitted to the officers concerned.

30/x/17
(S.VIJAY)

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Vellore.

14. Signature/thumb impression of the complainant/informant:
30/10/17

15. Date and Time of Despatch to the Court: 30.10.2017 at 14.00 hours

Submitted to the Hon'ble Chief Judicial Magistrate-cum-Special Judge, Vellore.